நாடாளுமன்றத் தேர்தல் - 2024

நடைபெற உள்ள நாடாளுமன்ற பொதுத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகமும் – தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியும் மற்றத் தோழமைக் கட்சிகளும் இணைந்து போட்டியிடுவது தொடர்பாக 9.3.2024 அன்று செய்து கொண்ட தொகுதி ஒப்பந்தத்தின் தொடர்ச்சியாக, இந்த நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி பின்வரும் 10 (பத்து) தொகுதிகளில் போட்டியிடுவதென இன்று (18.3.2024) தீர்மானிக்கப்பட்டது.

தொகுதிகளின் விவரம்

1. திருவள்ளூர் (தனி)
2. கடலூர்
3. மயிலாடுதுறை
4. சிவகங்கை
5. திருநெல்வேலி
6. கிருஷ்ணகிரி
7. கரூர்
8. விருதுநகர்
9. கன்னியாகுமரி
10. புதுச்சேரி

18/3/2024

(கு. செல்வப்பெருந்தகை)
தலைவர்,
தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி

(மு.க.ஸ்டாலின்)
தலைவர்,
தி.மு.க.

நாடாளுமன்றத் தேர்தல் - 2024

நடைபெற உள்ள நாடாளுமன்ற பொதுத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகமும் – மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகமும் மற்றத் தோழமைக் கட்சிகளும் இணைந்து போட்டியிடுவது தொடர்பாக 8.3.2024 அன்று செய்து கொண்ட தொகுதி ஒப்பந்தத்தின் தொடர்ச்சியாக, இந்த நாடாளுமன்றத் தேர்தலில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் பின்வரும் தொகுதியில் போட்டியிடுவதென இன்று (18.3.2024) தீர்மானிக்கப்பட்டது.

தொகுதி விவரம்

1. திருச்சிராப்பள்ளி

18/3/2024

(வைகோ)
பொதுச்செயலாளர்,
மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம்

(மு.க.ஸ்டாலின்)
தலைவர்,
தி.மு.க.

திருச்சி தொகுதியில்

ம.தி.மு.க. வேட்பாளர் துரை வைகோ!

சென்னை, மார்ச் 20- திருச்சி மக்களவைத் தொகுதியில் துரை வைகோவை வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்று அக்கட்சியின் பெரும்பாலான நிர்வாகிகள் வலியுறுத்தினார்கள்.

இந்நிலையில், ம.தி.மு.க. நிர்வாகக்குழு கூட்டம் அவை தலைவர் அர்ஜுனமூர்த்தி தலைமையில் நேற்று முன்தினம் நடந்தது. பொதுச்செயலாளர்வைகோ மற்றும் மாநில நிர்வாகிகள் இதில் கலந்து கொண்டனர்.

திருச்சி தொகுதியில் யார் போட்டியிட வேண்டும், பாராளுமன்ற தேர்தல் பணிகள், கூட்டணி கட்சிக்காக பிரசாரம் செய்தல் தொடர்பாக கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

இறுதியில் துரை வைகோவை வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்று பெரும்பாலான நிர்வாகிகள் வலியுறுத்தினார்கள். இதனையடுத்து, திருச்சி தொகுதியில் ம.தி.மு.க. வேட்பாளராக அக்கட்சியின் முதன்மைச் செயலாளரான துரை வைகோ அறிவிக்கப்பட்டார்.

தி.மு.க. கூட்டணியில் கொ.ம.தே.க. சார்பில்

நாமக்கல் தொகுதி வேட்பாளர் அறிவிப்பு!

சென்னை,மார்ச் 20- கொ.ம.தே.கட்சியின் பொது செயலாளர் ஈஸ்வரன் தலைமையில் நடந்த கூட்டத்தில் வேட்பாளர் பற்றி முடிவு செய்யப்பட்டு உள்ளது.

நாடாளுமன்ற மக்களவை தேர்தல் நாடு முழுவதும் ஏப்ரல் 19ந்தேதி தொடங்கி ஜூன் 1ந்தேதி வரை ஏழு கட்டங்களாக நடைபெற உள்ளது. வாக்கு எண்ணிக்கை ஜூன் 4ந்தேதி நடைபெற்று அன்றே முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன.

தமிழகத்தில் 39 தொகுதிகள், புதுச்சேரியில் ஒரு தொகுதி என மொத்தம் 40 தொகுதிகளிலும் ஏப்ரல் 19 ந்தேதி ஒரே கட்டத்தில் தேர்தல் நடத்தப்பட உள்ளது

தி.மு.க. கூட்டணியில் தொகுதி பங்கீடு தீவிரமாக நடைபெற்றது. இதில் கூட்டணி கட்சிகளுக்கு மொத்தம் 19 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 21 தொகுதிகளில் தி.மு.க. போட்டியிட உள்ளது. இதன்படி, நாமக்கல் தொகுதியானது கூட்டணி கட்சியான கொங்குநாடு மக்கள் தேசிய கட்சிக்கு (கொ.ம.தே.க.) ஒதுக்கப்பட்டது.

இந்நிலையில், கட்சியின் பொது செயலாளர் ஈஸ்வரன் தலைமையில் நடந்த கூட்டத்தில் வேட்பாளர் பற்றி முடிவு செய்யப்பட்டு உள்ளது.

இதன்படி, கொ.ம.தே.க. சார்பில் நாமக்கல் தொகுதி வேட்பாளராக சூரிய மூர்த்தி தேர்வு செய்யப்பட்டு உள்ளார். அவர், தி.மு.க.வின் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட உள்ளார். அவர், கட்சியில் மாநில இளைஞரணி செயலாளராக செயல்பட்டு வருகிறார்.

இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி

வேட்பாளர்கள் அறிவிப்பு!

திருப்பூர் நாடாளுமன்றத் தொகுதி
கே.சுப்பராயன்

நாகை நாடாளுமன்றத் தொகுதி
வை.செல்வராஜ்

சென்னை. மார்ச் 20- இந்திய கம்யூனிஸ்டு கட்சி கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட தொகுதிகளான நாகப்பட்டினம், திருப்பூரில் மீண்டும் போட்டியிடுகிறது. இந்த 2 தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்களை தேர்வு செய்வதற்காக அக்கட்சியின் நிர்வாகக்குழு கூட்டம் சென்னை தியாகராய நகரில் உள்ள கட்சி அலுவலகத்தில் நடந்தது. நேற்று முன்தினம் 2வது நாளாக நிர்வாகிகள் கூடி ஆலோசித்தனர். தேசிய செயலாளர் நாராயணா. மாநில செயலாளர் இரா. முத்தரசன் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர். வேட்பாளராக யாரை நிறுத்துவது என்பது குறித்து விவாதித்தனர்.

திருப்பூர் தொகுதியில் தற்போது எம்.பி.யாக உள்ள சுப்பராயனை மீண்டும் நிறுத்துவது எனவும் நாகப்பட்டினம் தொகுதியில் மாவட்ட செயலாளர் வை.செல்வராஜ் என்பவரை நிறுத்தவும் ஒருமித்த முடிவு எடுக்கப்பட்டது.

மாநில நிர்வாகிகள் கருத்துக்களை ஏற்று இறுதியில் சுப்பராயன் மற்றும் வை.செல்வராஜ் ஆகியோரை வேட்பாளர்களாக நிறுத்தலாம் என்று ஒரு மனதாக தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் வேட்பாளர்களாக தேர்வு செய்யப்பட்ட இருவரையும் நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளார்.

அதன்படி. திருப்பூர் தொகுதியில் சுப்பராயன் போட்டியிடுவதாகவும். நாகப்பட்டினம் தொகுதியில் செல்வராஜ் போட்டியிடுவதாகவும அறிவிக்கப்பட்டுள்ளது.

தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் துரை. சந்திரசேகரன் எம்.எல்.ஏ கூட்டத்தின் தீர்மானங்களை விளக்கி சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி.கே.ஜி.நீலமேகம், எம்.இராமசந்திரன், து.செல்வம், ஒரத்தநாடு தொகுதி மேற்பார்வையாளர் அக்ரி கணேசன், தஞ்சை மாநகரச் செயலாளர் சண்.இராமநாதன், மாநிலக் கழக நிர்வாகிகள் எஸ்.ஜித்து, அஞ்சுகம் பூபதி, மாவட்டக் கழக நிர்வாகிகள் சி.இறைவன், எல்.ஜி.அண்ணா. புண்ணியமூர்த்தி, கனகவள்ளி பாலாஜி, மாவட்ட ஊராட்சி தலைவர் உஷா புண்ணியமூர்த்தி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

க.பொன்முடியை அமைச்சராக்க மறுக்கும்

ஆளுநர் ரவியின் செயல் சட்டமீறல் - அரசியல் அமைப்புக்கு எதிரானது !

மூத்த வழக்கறிஞர் – பி.வில்சன் எம்.பி. பதிவு!

சென்னை, மார்ச் 20- முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், முன்னாள் அமைச்சர் க.பொன்முடிக்கு மீண்டும் அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்து வைக்க வேண்டும் என்று எழுதிய கடிதத்தை ஏற்க மறுத்த தமிழ்நாடு ஆளுநர் ரவியின் செயல் சட்ட மீறல் மட்டுமின்றி, அரசியலமைப்புப் பிரிவு (164(1)க்கு எதிரானது என்று மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி. தமது 'எக்ஸ்' வலைதளப் பதிவில் தெரிவித்துள்ளார்.

தி.மு.க. தலைமைக் கழக சட்டத் தலைமை ஆலோசகரும் மூத்த வழக்கறிஞருமான பி.வில்சன் எம்.பி., அவர்கள் தனது 'எக்ஸ்' வலைதளப் பக்கத்தில் வெளியிட்ட பதிவு வருமாறு:-

தமிழ்நாடு ஆளுநர் ஆர். என். ரவி, அரசியலமைப்புச் சட்டத்துக்குச் சிறிதும் மரியாதை அளிக்காமல், மீண்டும் மீண்டும் தவறிழைப்பவராக இருந்து வருகிறார்.

க.பொன்முடி 19.12.2023 அன்று மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தால் குற்றவாளி எனத் தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டார். ஆனால், 11.03.2024 அன்று மாண்பமை உச்சநீதிமன்றம் அந்தத் தீர்ப்பை மற்றும் தண்டனையை நிறுத்தி வைத்தது. அவ்வாறு தீர்ப்பை மற்றும் தண்டனையை நிறுத்தி வைத்தபோது, அமைச்சர் பொறுப்பை வகிக்கவோ, சட்டமன்ற உறுப்பினராகத் தொடரவோ இடையூறு ஏற்படக் கூடாது என்பதற்காகவே இடைக்கால உத்தரவு விதிப்பதாகவும், இல்லையென்றால் அது சரிசெய்ய இயலாத பாதிப்பை உருவாக்கும் என்றும் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறது.

உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கு இடைக்கால உத்தரவு விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, 13.03.2024 என்று தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் அவர்கள் 19.12.2023 தேதியிலான அவரது பதவிநீக்கம் செல்லாது என்று அறிவித்தார். மேலும், 16.03.2024 அன்று திருக்கோயிலூர் சட்டமன்றத் தொகுதி (எண்.76) காலியாக உள்ளதாக அறிவித்த அறிவிக்கையையும் தேர்தல் ஆணையம் திரும்பப் பெற்றுக்கொண்டது.

முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆளுநருக்கு கடிதம்!

'எனவே அரசியலமைப்பின்பாற்பட்ட அனைத்து நிறுவனங்களும் மாண்பமை உச்சநீதிமன்றத் தீர்ப்புக்குக் கட்டுப்பட்டு நடந்துகொண்டுள்ளன. க.பொன்முடி அவர்களது வழக்கின் தீர்ப்பும் தண்டனையும் நிறுத்தி வைக்கப்பட்டதையடுத்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 13.03.2024 அன்று, க.பொன்முடி அவர்களை அமைச்சராக நியமிக்கவும், அவருக்கு உயர்கல்வித்துறையை ஒதுக்கிடவும் கோரி ஆளுநர் அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

இவையனைத்தையும் மீறி, ஆளுநர் ரவி, "மாண்பமை உச்சநீதிமன்றம் தீர்ப்பினை நிறுத்தித்தான் வைத்துள்ளது, இரத்து செய்ய வில்லை" என உச்சநீதிமன்றத் தீர்ப்புக்குத் தனது சொந்த விளக்கத்தை அளித்துள்ளார். இது ஓர் அபத்தமான பொருள்கோடல் என்பதோடு, மாண்பமை உச்சநீதிமன்றத் தீர்ப்பை அவமதிக்கும் செயலுமாகும்.

அரசியல் சட்டப்பிரிவு 142 மற்றும் 144இன்படி ஆளுநர் என்பவர் மாண்பமை உச்சநீதிமன்றத்தின் உத்தரவுகளுக்குக் கட்டுப்பட்டவர் ஆவார். மேலும், க.பொன்முடி அவர்களை உயர்கல்வித் துறை அமைச்சராக நியமிக்க தமிழ்நாடு முதலமைச்சர் விடுத்த கோரிக்கையை ஏற்க அவர் அப்பட்டமாக மறுத்தது சட்டமீறலும் அரசியலமைப்புப் பிரிவு 164(1)க்கு எதிரானதும் ஆகும்.

ஆளுநரின் செயல் நீதிமன்ற அவமதிப்பாகும்!

எம்.எல்.ஏ. பதவிநீக்கம் செய்யப்படக் கூடாது என்பதற்காகவே உச்சநீதிமன்றம் இவ்வாறு தீர்ப்பு வழங்கியுள்ள நிலையில், ஆளுநரின் செயல் ஐயத்திற்கிடமின்றி, நீதிமன்ற அவமதிப்பே ஆகும்.

உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கும் தண்டனைக்கும் உச்சநீதிமன்றத்தால் தடை விதிக்கப்பட்டிருக்கும் நிலையில், அந்தத் தண்டனை சட்டத்தின் பார்வையில் செல்லத்தக்கதல்ல. இச்சூழலில், ஆளுநரின் பொருள்கோடலைச் சட்ட அறியாமையாக மட்டுமல்ல, மாண்பமை உச்சநீதிமன்ற அவமதிப்பாகவும் கொள்ள வேண்டியுள்ளது. இதற்காக ஆளுநர் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்பட வேண்டும்.

ஒருவர் அறநெறிப்படியோ பிற அடிப்படையிலோ அமைச்சராகத் தொடரலாமா வேண்டாமா என்பதை ஆளுநர் முடிவுசெய்ய இயலாது என்பது தற்போது ஐயத்திற்கே இடமின்றி நிறுவப்பட்டுவிட்டது. இது முழுக்க முழுக்க முதலமைச்சரின் விருப்புரிமைக்குட்பட்டது. அமைச்சராக நியமிக்க ப்படுபவரின் தகுதிப்பாடு குறித்த முதலமைச்சரின் மதிப்பீட்டை ஆளுநர் கேள்வியெழுப்ப முடியாது என்பதைப் பல்வேறு தீர்ப்புகளில் உச்சநீதிமன்றம் தெளிவாக்கிவிட்டது.

தமிழ்நாடு பா.ஜ.க.வின் அறிவிக்கப்படாத தலைவராகவே ஆளுநர் செயல்பட்டு வருவதாலும், ஊடக கவனத்தை ஈர்ப்பதற்காகச் செயல்படுவதே அவரது இயல்பாகிவிட்டதாலும் அரசுடன் அவர் கடைப்பிடிக்கும் மோதல்போக்கு கொஞ்சமும் வியப்பளிக்க வில்லை. ஆனால் அவரது தற்போதைய செயலால் அவர் தாம் வகிக்கும் அரசியலமைப்புப் பொறுப்புக்குத் தகாத, நீதிமன்றத்தை அவமதிக்கும் செயலைப் புரிந்துள்ளார். புனித ஜார்ஜ் கோட்டையில் பா.ஜ.க. வினால் ஒருநாளும் கால்பதிக்க முடியாதென்பதால், ஆளுநர் மாளிகையில் இருந்துகொண்டு மாநில அரசுக்கு இணையாக இன்னொரு அரசை நடத்த அவர் முயல்கிறார்.

அரசியலமைப்புக்கோ, சட்டங்களுக்கோ, உச்சநீதிமன்றத் தீர்ப்புகளுக்கோ துளியும் மதிப்பளிக்காத இந்த ஆளுநர் உடனே பதவிநீக்கம் செய்யப்பட வேண்டும். ஆளுநர் பதவிக்கே இழுக்கான ரவி அவர்களை உடனடியாகத் திரும்பப் பெறுமாறு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

எப்போது அவர் வேண்டுமென்றே உச்சநீதிமன்றத் தீர்ப்புகளை மீறி நடக்கவும், அரசியலமைப்பு முறைகளைக் களங்கப்படுத்தவும், சட்டத்தின் விதிகளைப் புறக்கணிக்கவும் தலைப்பட்டாரோ அப்போதே அவர் தாம் வகிக்கும் பதவியில் நீடிப்பதற்கான தகுதியை இழந்துவிட்டார்.

இவ்வாறு மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி. தமது 'எக்ஸ்' பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

மாதவரத்தில் பாக முகவர்கள் கூட்டம் !

சென்னை, மார்ச் 20- மாதவரம் வடக்கு பகுதி மாத்தூர் 19வது வட்ட நிர்வாகிகள் பாக முகவர்கள் மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் அவசர ஆலோசனைக் கூட்டம் வட்ட பொருளாளர், கழக முன்னோடி கே. சங்கர் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் வட்டக் கழக செயலாளர் மாத்தூர் கா.தாமரைச்செல்வன் முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில் மாதவரம் வடக்கு பகுதிக் கழகச் செயலாளர் புழல் எம்.நாராயணன் மற்றும் மாதவரம் தொகுதி பார்வையாளர் நா.சந்திரபாபு கலந்துகொண்டு, கோடிங் சீட் பூர்த்தி செய்வது பற்றியும், கழக ஆக்க பணிகள் பற்றியும் ஆலோசனை வழங்கினார்கள். நாடாளுமன்றத் தேர்தலில் செயல்படும் முறைகள் குறித்தும் வீடு வீடாக சென்று வாக்கு சேகரித்தல் மற்றும் இல்லம் தேடி ஸ்டாலினின் குரல் திண்ணை பிரச்சாரம் ஆகியவற்றை மீதமுள்ள வீடுகளில் முடிப்பது குறித்தும் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், கிள்ளுக்கோட்டை சரகம், செங்களூர் வருவாய் கிராமத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் 13.03.2024 அன்று நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா, வேளாண்மை உழவர் நலத்துறை சார்பில் பயனாளிகளுக்கு வேளாண் இடுபொருட்களை வழங்கினார். உடன் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா. செல்வி, குன்றாண்டார்கோவில் ஒன்றிய குழுத் தலைவர் திருமதி.பாண்டிச்செல்வி கே.ஆர். என்.போஸ், இணை இயக்குநர் (வேளாண்மை) பெரியசாமி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.